# கண்ணிவெடி கவனம்
## Mind the mines

**கண்ணிவெடிகள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

மீண்டும் வாழ்வோம்

*இலங்கை அரசாங்கம், யுனிசெப் (UNICEF), ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான உதவிப் பிரிவு (ECHO), ஸ்பெயின் அரசாங்கம் என்பன இன்டர்நியூஸ் நிறுவனத்துடன் இணைந்து நடத்தை ரீதியிலான மாற்றங்களை உண்டுபண்ணுவதன் மூலம் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் என்பன தொடர்பான உங்களது விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டும் அத்தகைய பொருட்களிலிருந்து உண்டாகக்கூடிய அனர்த்தங்கள், காயங்கள் என்பனவற்றை குறைக்கும் பொருட்டும் 'கண்ணிவெடி கவனம்' (Mind the mines) என்ற தலைப்பில் கண்ணிவெடி அபாய கல்வியூட்டல் பிரச்சாரத்தை மேற்கொள்கிறது.*

*இலங்கையின் யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் சுமார் 1.5 மில்லியன் மிதிவெடிகளும் வெடிக்காத பொருட்களும் சுமார் 40 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரவிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*'விழிப்போடு இருப்போம் , வருமுன் காப்போம்'*

*இந்தப் பரப்புரைத் திட்டம் உங்களிடம் இருந்தும் கருத்துகளை எதிர்பார்க்கின்றது. கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வுத் திட்டம் எவ்வாறு உங்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பது குறித்து எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.*

**ஆசிரியர்**
மீண்டும் வாழ்வோம்
**த.பெ. இல:1039, கொழும்பு**

## மிதிவெடி ஒன்றை கண்டால் என்ன செய்வது?

- அமைதியாகவும் நகராமலும் நீங்கள் நின்ற இடத்திலேயே அப்படியே நில்லுங்கள்.
- அருகில் இருப்போர்களை விலகிச் செல்லுமாறு எச்சரியுங்கள்
- உதவி கேட்டு அழையுங்கள்
- உகந்த உதவி கிடைக்கும்வரை அமைதியாகக் காத்திருங்கள்
- எவ்வித அபாயகரமான செயல்களையும் செய்யாதீர்கள்

*சந்தேகத்திற்கிடமான பொருட்களைக் கண்டால் பின்வரும் நிறுவனம் ஒன்றிற்கு அறிவிப்போம்.*

| வவுனியா மாவட்டம் | மன்னார் மாவட்டம் |
|---|---|
| CTF: 024 222 1127 | CTF: 023 222 2501 |
| DMAO: 024 222 4214 | DMAO: 023 222 2235 |
| SLA: 011 306 1231 | SLA: 011 306 1231 |
| MAG: 024 3243451 | MAG: 023 224 3451 |
| Sarvatra: 024 492 0206 | Sarvatra: 024 492 0206 |
| Horizon: 024 224 8150 | Horizon: 023 223 3055 |

FSD: 024 458 9059 / 024 222 0052 / 024 324 5737

DDG: 024 324 8214

UNICEF: 024 222 3485

**யாழ்ப்பாணம் மாவட்டம்**
The HALO Trust:
021 320 5339

தங்கள் பகுதியிலுள்ள
கிராம சேவை அலுவலர், பாதுகாப்புப் படையினர்
ஆகியோருக்கும் தெரியப்படுத்துங்கள்



## வெடிக்காத வெடிபொருளை கண்டால் என்ன செய்வது?

- வெடிக்காத வெடிபொருளைக் கண்டால் அவ்விடத்திலிருந்து விலகி அதனை மற்றவர்கள் தொட வேண்டாம் என எச்சரிக்க வேண்டும்.
- அந்தப் பொருளைப் பற்றியும் அது உள்ள இடத்தைப் பற்றியும் குறிப்பெடுத்துக்கொள்ளல் வேண்டும்.
- அவ்விடத்திலிருந்து விலகி பாதுகாப்பானதென குறிப்பிடப்பட்ட பாதை ஓரமாய் சென்று நின்றுகொள்ளுங்கள்.
- உள்ளூரில் உள்ள நிறுவனங்களுக்கு இது பற்றி அறியத்தரவும்.
- ஊரில் உள்ள ஏனையோருக்கும் அந்தப் பகுதியில் வெடிக்காத வெடிபொருள் இருப்பதைத் தெரியப்படுத்தவும்.
- வெடிக்காத வெடிபொருளை அகற்றும் அதிகாரிகளுடன் அது அகற்றப்படும்வரை தொடர்பில் இருங்கள்.

*வடக்கில் கண்ணிவெடி அகற்றுவதற்கான ஆலோசனைக்குழுவினால் (MAG) முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் குறித்து அந்நிறுவனத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சி முகாமையாளர் லெவ்லின் ஜோன்ஸ் அவர்களை நேர்கண்டுள்ளோம்.*

**MAG நிறுவனம் வடக்கில் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது?**

நாங்கள் வடக்கில் கண்ணிவெடி ஆராய்ச்சிகள் மற்றும் அவற்றை அகற்றும் நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றோம். தற்போது மன்னார் தானியக்களஞ்சியப் பிரதேசத்தில் எமது நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளோம். வடக்கைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இதைவிட நாம் வவுனியாவிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இந்த இரண்டு மாவட்டங்களிலேயே நாம் எமது கவனத்தைச் செலுத்தியுள்ளோம்.

கண்ணிவெடி அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிக் கூற முடியுமா?

எமது செயற்திறனை இந்த வருடம் ஜூலை மாதத்திலிருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளோம். எங்களுக்கு மேலதிக கண்ணிவெடி அகற்றும் இயந்திரங்கள் கிடைத்துள்ளன. இதைவிட நாம் மேலதிகக் கண்ணிவெடி அகற்றும் நிபுணர்களை இணைத்துள்ளோம். கண்ணிவெடிகளால் மக்களுக்கு அதிகம் பாதிப்புக்கள் ஏற்படாத இடங்கள் என்று இனம்காணப்பட்ட இடங்களிலும் நாம் எமது நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளோம்.

**நீங்கள் மேற்கொண்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் எந்த அளவுக்குப் பூர்த்தியாகியுள்ளது?**

மன்னார் தானியக்களஞ்சியப் பிரதேசத்;தைப் பொறுத்தவரையில் எங்களுடைய நடவடிக்கைகளில் பாரிய அளவு பூர்த்தியாகியுள்ளது. இதைவிட நாங்கள் மக்கள் வாழும் பிரதேசங்களிலும் அதனை சூழ உள்ள சில பிரதேசங்களிலும் நமது வேலைகளை முடித்துள்ளோம். எனினும் தற்போது இந்த பிரதேசங்களில் பெய்து வரும் மழையினால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் நமது நடவடிக்கைகளில் சில தடங்கல்கள் ஏற்படுகின்றன. மடு பிரதேசத்திலும் நாம் கடந்த சில வாரங்களாகப் பணிபுரிந்து வருகின்றோம். இந்த பிரதேசத்திலும் மக்கள் மீளக்குடியேறும் விதமாக எமது நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி வருகின்றோம்.

**கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இன்னும் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

அதுபற்றி சொல்வது கடினம். ஏனெனில், வடக்கைப் பொறுத்தவரையில் இறுதியாக நிலவிய போர் சூழலுக்கு முன்னரும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது, ஏற்கனவே புதைக்கப்பட்டவைக்கு மேலாக இன்னும் பல புதைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பான தகவல்கள் எம்மிடம் போதுமானதாக இல்லை.

**கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளின் போது நீங்கள் எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கின்றீர்கள் என்று கூற முடியுமா?**

மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் பாதுகாப்பாக குடியமர்த்துவதற்கு ஏற்ற விதமாக எமது வேலைகளை முடிப்பதுதான் முக்கியமான சவாலாக அமைகின்றது. அதேவளை, நாங்கள் தற்செயலாக சில கண்ணிவெடிகளை அகற்றாமல் விட்டால் அது மக்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும். ஆகவே, இவை இரண்டையும் கவனத்தில் கொண்டு எமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

**மக்களை மீள்குடியமர்த்திய பகுதிகளில் நீங்கள் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றீர்களா?**

தற்பொழுது எமது கவனம் மக்கள் மீள்குடியேற்றப் பட்டுக்கொண்டிருக்கும் இடங்களில் இருக்கின்றது. மக்களின் மீள்குடியேற்றம் முற்றாக நிறைவடைந்ததும், அந்தப் பிரதேசங்களில் வேலைகளைத் தொடரக்கூடியதாக இருக்கும். முக்கியமாக நாங்கள் மீளவும் அங்கு குடியேற்றப்பட்ட மக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கக்கூடியதாக இருக்கும்.

**இலங்கையைப் பொறுத்தவரையில் எவ்வாறான கண்ணிவெடிகள் உபயோகிக்கப்பட்டுள்ளன என்று கூற முடியுமா?**

பல்வேறு விதமான கண்ணிவெடிகள் உபயோகிக்கப்பட்டன. சில வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. மேலும் சில வடக்கிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. இவை தவிர மோட்டார்கள் மற்றும் வேறு வெடிபொருட்களைக்கொண்டு கண்ணிவெடிகளாக உபயோகித்த சந்தர்ப்பங்களும் உண்டு.



**மிதிவெடிகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அனுசரணையாய் இருந்து ஆதரவளியுங்கள்**

# கண்ணிவெடி கவனம்
Mind the mines

INTERNEWS | EUROPEAN COMMISSION Humanitarian Aid | unicef

**கண்ணிவெடிகள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

மீண்டும் வாழ்வோம்

## மிதிவெடிகளால் பாதிப்புக்குள்ளாகும் வனவாழ்வு



பல நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ள நிலக்கண்ணி வெடிகளானது மக்களின் உயிர்களுக்கு மாத்திரமல்ல வன வாழ்வுக்கும் அச்சுறுத்தலாகவே விளங்குகின்றன என்பது சர்வதேச தரவுகள் மூலம் நிரூபணமாகின்றன. ஆபிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த பல நாடுகளிலுள்ள வனவிலங்குகளின் உயிர்களுக்கு நிலக்கண்ணி வெடிகள் அச்சுறுத்தலாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மொசாம்பிகியுவில் நூற்றுக்கும் அதிகமான யானைகள் நிலக்கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது. இதேவேளை கோரங்கோ தேசிய வனப்பூங்காவைச் சேர்ந்த யானைகள் தமது கால்களையும் இழந்துள்ளதாக ஆயுதங்களுக்கெதிரான பிரச்சார அமைப்பின் ஏற்பாட்டாளர் ஸ்கொட் நாதன்சன் தெரிவித்துள்ளார்.

ருவாண்டாவில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளில் சிக்கி அதிகமான கொரில்லாக்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதேபோல் 1990 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் நிலக்கண்ணி வெடியில் சிக்கி ஐரோப்பிய கரடிகள் மான்கள் லைனெக்ஸ் மற்றும் நாய்கள் பெருமளவில் உயிரிழந்துள்ளதாக குரொஷியாவிலுள்ள செக்ரெப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பேராசிரியர் டிஜூரோ ஹியுபர் தெரிவித்துள்ளார்.

வனப்பகுதிகளிலும் விவசாய நிலங்களிலும் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதால் கால்நடைகள் மற்றும் மிருகங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இலங்கையிலும் நிலக்கண்ணி வெடியில் சிக்கி யானைகள் காயமடையும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக் இலங்கை வனவிலங்கு அதிகாரச் சபையின் திட்ட பணிப்பாளர் சண்தீப் கொரியர் தெரிவித்தார் .

## மீண்டும் வாழ்வோம் உங்களுக்கான தகவல் ஊடகம்

உங்கள் வாழ்நிலையை மேம்படுத்தக் கூடிய மனிதாபிமானப் பணிகள் தொடர்பான செய்திகளை ‘‘மீண்டும் வாழ்வோம்’’ வாராந்தத் தகவல் இதழ் உங்கள் நலன்பொருட்டு இலவசமாக வெளியிடுகிறது.

‘மீண்டும் வாழ்வோம்’’ வானொலி நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளிவரை இரவு 9.30 முதல் 10.00 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம்.வானொலியில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 2.00 மணிவரையும் ஒலிபரப்பாகிறது.

- **‘‘மீண்டும் வாழ்வோம்’’ தகவல் இதழ் உங்கள் பிரதேசத்தில் கிடைப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா?**
- **எமது செய்தி ஊடகத்துக்குப் பங்களிக்க விரும்புகிறீர்களா?**
- **எவ்விதமான தகவல்கள் இடம்பெற வேண்டுமென விரும்புகிறீர்கள்?**

**உங்களது அபிப்பிராயங்களை எமக்கு எழுதுங்கள்...**

**முகவரி:**
மீண்டும் வாழ்வோம்
**த.பெ. இல:1039, கொழும்பு**

## கண்ணிவெடியினால் பாதிக்கப்பட்டவருக்கு எவ்வாறு முதலுதவி அளிப்பது?



காயப்பட்டவர் மயக்க நிலையில் இருந்தால் அவரது தலையை சாய்த்து வாய்ப்பகுதியை உயர்த்தி மூச்சு விடுவதற்கு இலகுவாக்க வேண்டும். அவர்களது முள்ளந்தண்டில் காயம் இருக்கலாம் என்று சந்தேகம் இருந்தால் அவரது தலையை சாய்க்காமல் மூச்சு விட இலகுவாகும்படிக்கு நாடிப்பகுதை இரு கைகளாலும் பிடித்து முன்பக்கமாகத் தள்ளுங்கள்.

பாதிக்கப்பட்டவரின் வாய்ப்பகுதிக்கு அண்மையில் உங்கள் காதை வைத்து அவர் மூச்சு விடுகின்றாரா என அவதானிக்கலாம். அவர் மூச்சு விடாமல் அல்லது குறைவாக மூச்சு விட்டால் வாய் மேல் வாய் வைத்து அவர் மூச்செடுக்க உதவி புரிய வேண்டும். இதயத் துடிப்பு இருக்கிறதா என்று பரிசோதித்து, அது இல்லாவிடில் அதற்கேற்ற முதலுதவி முறையை அணுக வேண்டும்.



இரத்தக் கசிவை நிறுத்த வேண்டும். காயப்பட்ட உறுப்பை இதயத்தின் மட்டத்தை விட உயரமாக வையுங்கள். காயத்தை சூழ உள்ள ஆடைப் பகுதியை அகற்ற வேண்டும். கால் பகுதியில் ஏற்பட்ட காயத்தை அறிய வயிறும் தொடையும் சேரும் இடத்திலோ அல்லது இதயத்திற்கு குருதி செல்லும் குழாய்களில் ஒன்றையோ அழுத்த வேண்டும். கைகளில் ஏற்பட்ட காயத்தை அறிய கமக்கட்டுப் பகுதியை அழுத்த வேண்டும்.



இயலுமான அளவு கட்டுத் துணிகளைப் பயன்படுத்த வேண்டும். காயத்தின் உட்பகுதியில் துணிகளை வைத்துக் கட்ட வேண்டும். குருதி கசிவு தொடர்ந்தால் கசியும் குழாயின் மீது மேலும் அழுத்தம் பிரயோகிக்கவேண்டும்.

### நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்

**O காயத்தைச் சுற்றிக் கட்டுப்போட்டு இரத்தப்போக்கை தடுப்பது வெடிபொருளால் பாதிக்கப்பட்டவருக்கு பரிந்துரைக்கப்பட்ட முதலுதவி அல்ல. அவ்வாறு செய்தால் காயம் பெரிதாக வாய்ப்பிருக்கின்றது.**

**O நீங்கள் மருத்துவராகவோ அல்லது பயிற்றுவிக்கப்பட்டவராகவோ இல்லையென்றால் காயத்திற்குத் தையலிடவோ அல்லது மேலதிக சிகிச்சைகளை மேற்கொள்ளவோ கூடாது.**

**O பயிற்றப்பட்ட உதாரணமாக செஞ்சிலுவை சங்கம் போன்ற நிறுவனங்களிடமிருந்து அடிப்படை முதலுதவியினை வழங்குவதற்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள எத்தனிக்க வேண்டும்.**

## அபாயகரமான பொருள் ஒன்றைக் கண்டால் அல்லது விபத்துக்களைக் கண்டால் தெரியப்படுத்தும் முறை

O கண்ணி வெடியிருக்கும் பகுதியை அடையாளம் கண்டால் மற்றவர்கள் அப்பகுதிக்கு வருவதைத் தடுங்கள். வெடிப்பொருட்களை தொட வேண்டாம் என மற்றவர்களை எச்சரியுங்கள். உடனடியாக இது குறித்து கிராம சேவகர், உங்கள் ஆசிரியர், பொலிஸ் அதிகாரி அல்லது கண்ணிவெடி தொடர்பில் செயற்படும் நிறுவனங்களுக்கு அறிவியுங்கள்.

## பயணங்களின்போது கவனிக்க வேண்டியவை

O நீங்கள் பயணிக்கும் பாதை பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத பட்சத்தில் அப்பகுதிக்கு செல்வதைத் தவிர்த்துவிடுங்கள். அல்லது பாதுகாப்பான பாதையில் பயணியுங்கள். இராணுவ காவலரண்கள்இ சோதனைச் சாவடிகள்இ அகழிகள்இ பாலங்கள்இ மற்றும் ஆற்றங்கரை போன்ற பகுதிகளுக்கு செல்லும் போது எச்சரிக்கையாக இருங்கள்.

O காலை நேரங்களில் பயணங்களை மேற்கொள்ள சந்தர்ப்பங்கள் உள்ளபோது அத்தகைய பயணத்தை மேற்கொள்ளுங்கள். பாதைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத பட்சத்தில் அப்பாதையைப் பயன்படுத்தாதீர்கள். பாதுகாப்பான பாதையைப் பயன்படுத்த முயற்சியுங்கள் அல்லாவிடில் வந்த வழியில் மீண்டும்; செல்லுங்கள்.

## உங்கள் நண்பர் சந்தேகமான பொருளுடன் விளையாடிக் கொண்டிருந்தால் என்ன செய்வது?



- விலகி நின்று மற்றவர்களுக்கு எச்சரியுங்கள்
- உங்கள் நண்பர் செய்வது ஆபத்தான செயல் என்பதை அவருக்கு விளக்குங்கள்.
- தொலைவில் இருந்து கொண்டே அந்தப் பொருளை மெதுவாக கீழே வைக்குமாறு நண்பரிடம் கூறுங்கள்.
- நீங்கள் கூறுவதை கவனிக்காவிட்டால் உடனே அந்த இடத்தை விட்டு அகலுங்கள்.

**தம்பி தங்கைகளே, புள்ளிகளை இணைப்பதன்மூலம் கண்ணிவெடியின் உருவமொன்றை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.**




**இவ்வாறான கண்ணிவெடிகள் ஆபத்தானவை எச்சரிக்கையுடன் இருங்கள்**